DINAMALAR-25-DEC-2010

# ஆறு ஆண்டில் 3,000 அரசு பள்ளிகளை தத்தெடுக்க ஈஷா அறக்கட்டளை திட்டம்

தூத்துக்குடி, டிச. 25-

''தமிழகம் முழுவதும் அடுத்த ஆறு ஆண்டில் 3,000 அரசு பள்ளிகளை தத்தெடுத்து மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக'' ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு ஜக்கிவாசுதேவ் தெரிவித்தார்.

தூத்துக்குடி வ.உ.சி., கல்லூரி மைதானத்தில், நேற்று மாலை ஈஷா யோகா அறக்கட்டளை சார்பில் பசுமை இயக்க துவக்க விழா, இசை முழக்கம், சத்குரு அருளுரை, கூட்டு தியானம் நிகழ்ச்சி நடந்தது.

அதில் பங்கேற்ற ஜக்கி வாசுதேவ், முன்னதாக நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் மரம் வளர்த்து அதன் மூலம் சுற்றுச்சூழலை 33 சதவீதம் பசுமையாக்க, ஈஷாவின் 'பசுமை இயக்கம்' துவங்கப்பட்டது. தூத்துக்குடியில் சுற்றுச்சூழலில் ஏற்படும் மாசை சரிகட்டவே, மரக்கன்றுகள் வளர்க்கப்படுகின்றன.

அடுத்த ஐந்து ஆண்டில் 2.5 லட்சம் மரக்கன்றுகளை நட்டுவளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் இதுவரை 1 கோடிக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள், மரங்களாக வளர்ந்துள்ளன.

இதன் மூலம், தமிழகத்தில் சுற்றுச்சூழலில் 5.2 சதவீதம் பசுமை ஏற்பட்டுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 11 கோடி மரக்கன்றுகளை நடவேண்டுமென நாங்கள் இலக்கு நிர்ணயித்துள்ளோம். மரக்கன்றுகளை பராமரித்து வளர்ப்பதில் பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர் ஆர்வமாகவுள்ளனர்.

எங்கள் அறக்கட்டளை மூலம், தமிழகம் முழுவதும் 206 பள்ளிகளை துவங்க திட்டமிட்டு தற்போது, எட்டு பள்ளிகளை துவங்கியுள்ளோம். மேலும், தமிழகம் முழுவதும் அடுத்தாண்டு 30 அரசு பள்ளிகளை தத்தெடுத்து அங்கு தேவையான வசதிகளை மேம்படுத்தி, மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்கவுள்ளோம்.

அடுத்த ஆறு ஆண்டுகளில் 3,000 அரசு பள்ளிகளை தத்தெடுக்கவுள்ளோம். மனிதனுக்கு உற்சாகமும், தெம்பும் இருந்தால், அவனால் எதையும் சாதிக்க முடியும். மனித உள்ளத்தில் இருக்கும் அவற்றை வெளிக்கொண்டு வர நாங்கள் தொடர்ந்து செயல்பட்டுவருகிறோம், என்றார்.